ஸ்ரீ நா. தா. ஆலய வெளியீடு: 1.

8049
Q1:38
32/1

உ

தஞ்சாவூர் மாவட்டம்
நன்னிலம் நகரத்தில் இருக்கும்

## ஸ்ரீ நாராயண தாண்டவேஸ்வர சுவாமி

# ஆலயத்தின் வரலாறு

(சுருக்கம்)

கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

**வேண்டுகோளுடன்**

மேற்படி ஆலயத்தின் தர்ம பரிபாலனத் தலைவர்
மகா-கோவிந்த சுவாமிகள் அவர்களால் சரித
நூலிலிருந்தும் புராதன ஏட்டுப் பிரதியி
லிருந்தும் தொகுத் தெழுதப்
பெற்றது.

சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
ஆணையர் அவர்களின் அனுமதியின்
வண்ணம் அச்சிற் பதிப்பிக்கப்
பெற்றது.

1963

ஸ்ரீ நா. தா. ஆலய வெளியீடு : 1.

உ

தஞ்சாவூர் மாவட்டம்
நன்னிலம் நகரத்தில் இருக்கும்
ஸ்ரீ நாராயண தாண்டவேஸ்வர சுவாமி

# ஆலயத்தின் வரலாறு

(சுருக்கம்)

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
KARAIKUDI
PHONE:

வேண்டுகோளுடன்

மேற்படி ஆலயத்தின் தர்ம பரிபாலனத் தலைவர்
மகா-கோவிந்த சுவாமிகள் அவர்களால் சரித
நூலிலிருந்தும் புராதன ஏட்டுப் பிரதியி
லிருந்தும் தொகுத் தெழுதப்
பெற்றது.

சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
ஆணையர் அவர்களின் அனுமதியின்
வண்ணம் அச்சிற் பதிப்பிக்கப்
பெற்றது.

1963

முதற் பதிப்பு : மார்ச்சு 1963.

பாரி அச்சகம், சென்னை - 1.

32/1

உ

சிவமயம்

# முகவுரை

தமிழில் மெய்ப்பொருளை விளக்கும் நூல்கள் பல உள்ளன எனினும் **கைவல்லிய நவநீதம்** என்னும் நன்னூல் மிகச் சிறந்த அருமந்த நூலாகு மென்பது ஐயவற நிற்பதாகும். இந் நன்னூலைச் செய்த பெரியார் தாண்டவராய சுவாமிக ளாவார்கள். இவர்கள், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமாம்ஸ தேவருக்கு ஸ்ரீ விவேகானந்தர் சீடராக அமைந்ததுபோல ஸ்ரீ நாராயண தேசிகருக்குச் சீடராக அமைந்தவர்கள் என்றால் சாலப் பொருந்தும்.

இவ்விரு முனிவர் பெருமக்களும் உலகோபகாரமாகச் சிவபூசை செய்ய முதலில் பாணலிங்கங்களை அமைத்துப் பூசித்ததுபோலப் பின்னர் தங்கள் விதேககாலத்தில் தங்கள் திருமேனிகளைத் தாங்கள் அமைத்த அச் சிவலிங்கங்களி னடியில் தம் சீடர்கள் ஒடுக்கஞ் செய்துப் பூசிக்கப் பெறும் ஸ்ரீ நாராயண தாண்டவேஸ்வர சுவாமி ஆலயத்தின் வரலாறு நன்கு விளங்கச் சுருக்கமாக ஸ்ரீ மகா. கோவிந்த சுவாமி யவர்கள் வரலாற்று நூல்களிலிருந்து ஒழுங்குறத் தொகுத்து ஒரு வசனத்தை எளிய முறையில் யாவரு முணருமாறு எழுதி யிருக்கின்றார்கள்.

இவ் வசனத்தால் அவ்விரு முனிவரும் தெய்வமொன்றே உபாதி வேற்றுமையால் பலவாறு விளங்கு

கின்றது என்பதை யுணரத் தாங்கள் வழிபடுந் தெய்வ லிங்கங்கட்கு '**ஏக நாயகன்**' எனப் பெயரிட்டுப் பூசித் தன ரென்பதும் அவ்வளவினின்றுவிடாது ஒரே பொருள்தான் மெய்ப் பொருள், உண்மைப் பார்வை யில் அப்பொருட் கந்நியமாக "ஏகமே வாத்துவிதம்" "நேகநாநாஸ்தி கிஞ்சன :" என்னும் சுருதி வாக்கியங் களின்படி ஒன்றுமில்லை என்பதை யாவரும் உணரு மாறு வெளிப்படுத்தும் முறையில் அக் கைவல்லிய நவ நீதம் என்னும் நூலை ஏவுதற் கருத்தாவாகவும் இயற்று தற் கருத்தாவாகவுமாக நின்று வெளிப்படுத்தினர் என் பதும் வேற்றுமையின்றி எல்லாரு மொருங்குகூடி இறைவனைப் பூசிக்கலா மென்பதை நிலைநாட்டினர் என்பதும் காரியப் பிரமங்களைப் பூசித்தல் மூலமாகவே சித்த சுத்தி முதலியன பெற்று ஏகமாம் பேரின்ப சித்தி பெறலா மென்பதை நினைப்பித்தனர் என்பதும் பிறவும் அறியப் படுகின்றன.

இதனைப் பெற்றுப் படித்து ஆலயத்திற்கு வேண்டு முதவிகளை யன்பர்கள் செய்ய வேண்டுமென வேண்டு கின்றனன்.

இங்ஙனம்,

**பண்டித. சித. நாராயணசாமி,**

அறுபத்துமூவர் மடம்,

திருவையாறு.

தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் நகரத்தில் இருக்கும்

# ஸ்ரீ நாராயண தாண்டவேஸ்வர சுவாமி

# ஆலயத்தின் வரலாறு

உ ... வார்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

## சுருக்கம்

நன்னில நகரில் பாணலிங்கப் பிரதிஷ்டை.

சீர்கொண்டு விளங்கும் சோழமண்டலத்திலே மதுவன மென்னும் நன்னில நகரிலே பூர்வகாலத்தில் இறைவன் திருவருளால் திருவவதாரஞ் செய்த ஸ்ரீநாராயண முனிவர் என்னும் குருசிரேஷ்டரும் அவருடைய பிரதம சீடரான ஸ்ரீ தாண்டவேஸ்வர முனிவரும் இறைவனது திருவருள் ஞானத்தைப் பூரணமாக அடைந்தவர்களாய், உலக க்ஷேமத்தைக் குறித்துத் தாங்கள் தனித்தனி அதிகாலை யாகிய பிரம்ம முகூர்த்த காலத்தில் சிவபூசை செய்யும் நியமமுடையவர்களாய் இருந்தமையால் அவ்வாறு தாங்கள் தனித்தனி பூசை செய்வதற்குத் தங்களால் பிரதிஷ்டை செய்யப்பெறும் சிவலிங்கங்கள் பாணலிங்கங் களாக இருப்பது சிறந்ததென்று கருதியவர்களாய், நன்னிலத்துப் பெருங்கோயிலில் விளங்கும் ஸ்ரீ மதுவ னேஸ்வர சுவாமியினது திருவருள் துணைகொண்டு தமது ஆசிரமத்தினருகில் ஆலயம் அமைத்து கலியுகாதி 4526 ஆம் ஆண்டு (ஆங்கிலம் கி. பி. 1424) குரோதி வருடம்

வைகாசி மாதம் விசாக நக்ஷத்திரத்தில் அவ்வாலயத்தில் ஒவ்வொரு முனிவரும் ஒவ்வொரு பாணலிங்கமாக இரண்டு பாணலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து அச் சிவலிங்கம் ஒவ்வொன்றிற்கும் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தின் சிவபுராணத்தில் "ஏகன் அநேகன் இறைவன்" என்று கூறுவது முதலான ஆன்றோர் வாக்கியங்களின் பொருளான, ஒன்றாயிருக்கும் காரணப் பிரம்மவடிவ இறைவனே, பல உருவங்களான காரியப் பிரம்மவடிவ தெய்வங்களாயும் இருக்கின்றான்; என்னும் கடவுள் ஒன்றே என்னும் உண்மையை ஞாபக மூட்டி அறிவுறுத்தும் திருநாமமாகிய "ஏகநாயகன்" என்னும் காரணத் திருநாமம் இட்டு, பிரம்ம முகூர்த்த காலத்தில் தாங்கள் பூசனை புரிந்து கொண்டும், மற்றக் காலங்களில் தங்கள் சீடர்களாலும் பக்தர்களாலும் பூசனை புரிவித்துக் கொண்டும், அவ் ஏகநாயகனை அறிந்தடைந்து ஏகமாகி ஜனனமரணாதி சர்வ துக்க நிவர்த்தி பேரின்பப் பிராப்தியுறும் ஞானமார்க்க முறையை உபதேசஞ் செய்துகொண்டும் இருந்தனர்.

பூசனை புரிபவர்களின் ஆசாரம்.

அவ் ஏகநாயகேஸ்வர இலிங்கங்களைப் பூசனை புரிபவர்கள் ஸ்நானம், அனுஷ்டானம், சிவகாருண்ணியம் ஈஸ்வரபக்தி என்னும் நான்கு ஆசாரமும் உடையவர்கள் அனைவரும் உயர்ந்தவர்களேயாதலால் அத்தகையவர்கள் அனைவரும் சாதி வேற்றுமையை மறந்து ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் இருக்கும் விஸ்வநாத லிங்கத்தினைப் பூசனைபுரிவது போல நன்னிலத்திலிருக்கும் ஏகநாயக லிங்கங்களையும் பூசனை புரியலாம் என்று விதித்து நடைபெறச் செய்தபடி முற்கூறிய ஆசாரங்களையுடைய தம் சீடர்களாலும் பக்தர்

களாலும் அன்றுமுதல் தொடர்ந்து பூசனை நடைபெற்று வருகின்றது என்பது உலகமறிந்த விஷயமேயாகும்.

**சான்றுக்கவிகள்.**

மேற்கூறியவாறு ஏகநாயகன் என்று பெயரிடப் பெற்றுள்ளதற்கும் அந்த ஏகநாயகனே அநேக தெய்வங் களாயும் சர்வ சீவர்களின் ஆன்மவடிவ அறிவு சொரூப மாயும் இருக்கின்றான் என்று அறிவித்து அமைத்தனர் என்பதற்கும் போதிய சான்று, அவ்வாறு பெயரிட் டமைத்த மேற்படி இரு முனிவர்களில் ஸ்ரீ நாராயண முனிவராகிய குருவின் ஆக்ஞையினால் அவருடைய பிரதம சீடரான ஸ்ரீ தாண்டவேஸ்வர முனிவர் தமிழ்க்கவிகளினால் இயற்றியருளிய சர்வ வேதாந்தசாரமான கைவல்லிய நவநீத நூலின் பாயிரத்தின் முதலாவது இரண்டாவது துதிக் கவிகளாகிய ;

பொன்னிலம் மாத ராசை பொருந்தினர் பொருந்தார் உள்ளம்
தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கும்
எந்நிலங் களினும் மிக்க எழுநிலம் அவற்றின் மேலாம்
நன்னிலம் மருவும் ஏக நாயகன் பதங்கள் போற்றி.

ஈன்றவித் தழிக்குஞ் செய்கைக் கேதுவாம் அயனுய் மாலாய்
ஆன்றஈ சனுமாய்த் தானே அனந்தமூர்த் தியுமாய் நிற்கும்
பூன்றமுத் தனுமாய் இன்பப் புணரியா தவனுய் நாளும்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே.

என்னும் கவிகளும் இவைபோன்ற பிறகவிகளும் (போதிய சான்று) ஆகும். முதலாவது துதிக்கவியில் "எந் நிலங் களினும் மிக்க எழுநிலம் அவற்றின் மேலாம் நன்னிலம் மருவும் ஏக நாயகன் பதங்கள் போற்றி" என்றதால் மதுவனமென்னும் நன்னில நகரிலும், துரியபூமி யென்னும்

சுத்தமான மனதிலும் விளங்கும் ஏகநாயகன் பதங்கள் போற்றி எனச் சிலேடையாக இருவகை நிலத்திலும் விளங்கும் ஏகநாயகனைக் குறிப்பிட்டு உணர்த்துகின்றூர் என்பது இங்கு அறியத்தக்கதாம். இக்கவிகளின் விசேட விபரங்களான விளக்க உரைகள், கைவல்லிய நவநீதத் திற்குச் சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல ஞானதேசிக சுவாமி கள் இயற்றிய உரை நூலிற் காணலாம்.

**ஏகநாயகனை ஞான பூசனைமுறையில் அறிந்தடைந்து ஏகமாகி ஜனன மரணுதி சர்வதுக்க நிவிர்த்தி பேரின்பப் பிராப்தி யுறும் முறையை வரிசைக் கிரமமாகக் கூறும் கைவல்லிய நவநீத நூல் இயற்றி உலகுக்கு அளித்தல்.**

இவ்வாறு ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்து பெயரிட்டுப் பூசனை நடைபெறச் செய்த பிற்காலத்தில் சீவர்களின் பிறப்பிறப்புத் துன்பங்களை நோக்கி, மகா கருணையுடையராய்த் தாம்பெற்ற மோக்ஷப்பேறு பெறுக இவ்வையகம் என்னுங் கருத்தால் உலகத்திலுள்ள அன்பர்களான முமுட்சுக்கள் அனைவரும் ஸ்ரீ ஏகநாயகனை ஞானபூசனை முறையில் அறிந்தடைந்து ஏகமாகி ஜனன மரணுதி சர்வதுக்க நிவிர்த்தி பேரின்பப் பிராப்தியுறும் பொருட்டு ஏகநாயகனின் பரமார்த்த ஞானமார்க்கத்தைக் கூறும் சர்வவேதாந்த சாரமான கைவல்லிய நவநீதம் என்னும் ஞானநூலை மோக்ஷசாதனம் முதல் சாத்தியம் வரை வரிசைக் கிரமமாக அன்பர்களான முமுட்சுக்கள் அனைவரும் எளிதில் அறிந்து அனுஷ்டித்து ஜனனமரணுதி சர்வதுக்க நிவிர்த்தி பேரின்பப் பிராப்தியாகிய மோக்ஷ நிலையடையும் வண்ணம் உலகமெல்லாம் போற்றும் முறை யில் ஸ்ரீ நாராயண முனிவரின் ஆக்ஞையினுல் ஸ்ரீ தாண்ட

8049
91-38



வேஸ்வர முனிவர் தமிழ் பாஷையில் கவிகளாக இயற்றி யருளி உலகத்திற்கு அளித்ததுடன் அந்த ஏகநாயக ராலயத்தருகிலிருந்த தமது ஆசிரமத்தில் குருசிட சம்பிர தாய முறையில் உபதேச பாடமும் நடத்திவந்தனர். இத்தகைய முறையில் கைவல்லியநவநீத நூலை இயற்றி யதை அந் நூலிலுள்ள,

படர்ந்தவே தாந்த மென்னும் பாற்கடல் மொண்டு முந்நூற்
குடங்களில் நிறைத்து வைத்தார் குரவர்கள் எல்லாம் காய்ச்சிக்
கடைந்தெடுத் தளித்தேன் இந்தக் கைவல்லிய நவநீ தத்தை
அடைந்தவர் விடய மண்தின் றலைவரோ பசியி லாரே.

ஆரணப் பொருளாம் வித்தி யானந்தம் விளங்க ஏதும்
காரணம் குறைவி லாமல் கைவல்லிய நவநீ தத்தைப்
பூரண மாக்க வேண் டிப் பூர்வமாம் நன்னி லத்தில்
நாரண குருந மக்கு நவின்றனர் யோகில் வந்தே.

என்னுங் கவிகளால் உணர்த்துகின்றார்.

## கைவல்லிய நவநீத நூலின் தெய்வம் கோள்கையின் பெருமைப் பாராட்டுகள்.

கைவல்லிய நவநீத நூலின் அருமையும் பெருமையு மான தெய்வம் கொள்கையின் விளக்கச் சிறப்பையும், மோக்ஷசாதனம் முதல் சாத்தியம் பரியந்தமான வரிசைக் கிரம முறையின் விளக்கச் சிறப்பையும் அறிந்து அநேக மகான்கள் உரையியற்றியதுடன் பாயிரங்களில் இந் நூலின் பெருமையினை மிகவும் பாராட்டிக் கூறியிருக் கின்றனர். இவ்வுரைகளில் சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல ஞானதேசிக சுவாமிகள் இயற்றிய உரைநூலே மிகவும் சிறந்ததாக உலகம் போற்றுகின்றது. இவ்வுரை நூல்கள்

இந்திய நாட்டின் பல ஊர்களிலுள்ள நூல்நிலையங்களில் வைக்கப் பெற்றிருப்பதுடன் ஆங்காங்கு குருசீட முறையில் உபதேச பாடமாகப் போதிக்கப்பட்டும் வருகின்றன

ஸ்ரீ வ. உ. சிதம்பரம்பிள்ளை என்னும் அரசியல் பேரறிஞர் தாம் இயற்றிய சிவஞானபோத உரை நூலின் பாயிரத்தில் "கைவல்லிய நவநீத நூலானது வேதாந்த நூல்களில் தனக்குச் சமானமானதும் மேலானதும் ஆன வேறு நூல் இல்லாத பெருமையுடைய நூலாகும் என்பது எனது அபிப்பிராயம்" என்று கூறியுள்ளனர்.

சென்னை லா டைம்ஸ் ஆசிரியர் ஸ்ரீ P. இராமநாதன் B.A. M.R.A.S., F.R.H.S. என்னும் வித்துவப் பேரறிஞர் தாம் இயற்றிய இருபதாம் நூற்றுண்டுத் தமிழ்ப் பேரகராதியிலும் யாழ்ப்பாணம் ஸ்ரீ நா. கதிரைவேற பிள்ளை என்னும் வித்துவப் பேரறிஞர் தாம் இயற்றிய முடிசூட்டு அகராதியிலும், மற்றும் பல புலவர்கள் தொகுத்த அகராதிகளிலும் தாண்டவராய சுவாமிகள் என்னும் தலைப்பின் கீழ் "சோழ தேசத்திலே நன்னில நகரிலே அந்தணர் குலத்திலே அவதரித்து விளங்கிய இவர் வேதாந்த சாஸ்திர வுண்மை நிலைகண்டு கைவல்லிய நவநீதம் என்னும் திவ்விய நூல் செய்தவர்" என்று எழுதியுள்ளனர்.

வடநாட்டுப் பேரறிஞர்களும், ஆந்திரநாட்டு பேரறிஞர்களும், கேரளநாட்டுப் பேரறிஞர்களும், ஆங்கிலநாட்டுப் பேரறிஞர்களும், ஜெர்மனிநாட்டுப் பேரறிஞர்களும் கைவல்லிய நவநீத நூலின் அருமையும் பெருமையுமான தெய்வம்கொள்கையின் விளக்கச் சிறப்பையும், மோக்ஷ சாதனம் முதல் சாத்தியம் பரியந்தமான வரிசைக்கிரம

முறையின் விளக்கச் சிறப்பையும் அறிந்து சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், ஜெர்மனி ஆகிய பாஷைகளில் மொழிபெயர்ப்புச் செய்துகொண்டு அவ்வந்நாடுகளில் பயின்றுவருகின்றனர் என்பது உலகப் பிரசித்தம். அவற்றுள் சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம் ஆகிய பாஷைகளில் மொழி பெயர்த்த கைவல்லிய நவநீதங்கள் இந்திய நாட்டிலுள்ள பல ஊர்களின் நூல் நிலையங்களில் வைக்கப்பெற்றுள்ளன. ஆங்கிலேயர்களில் டாக்டர் ஜி. யூ. போப் முதலிய பேரறிஞர்களின் பெருமுயற்சியினால் 1855 ஆம் ஆங்கில ஆண்டில் ஆங்கில பாஷையில் மொழி பெயர்த்த கைவல்லிய நவநீதமும், ஜெர்மானியர்களில் பேரறிஞர்களின் பெருமுயற்சியினால் 1854 ஆம் ஆங்கில ஆண்டில் ஜெர்மனி பாஷையில் மொழிபெயர்த்த கைவல்லிய நவநீதமும் இங்கிலாந்து நாட்டிற்கும், அமெரிக்க நாட்டிற்கும், ஜெர்மனி நாட்டிற்கும் அனுப்பப்பட்டன. அத்தகைய ஆங்கிலம், ஜெர்மனி பாஷைகளில் மொழி பெயர்க்கப்பெற்ற கைவல்லிய நவநீதங்களின் பிரதிகள் நமக்குத் தெரிந்த அளவில் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாசிரம நூல் நிலையம், நம்பர் (86) எண்பத்து ஆறிலும் (டாக்டர் ஸ்ரீ ஜி யூ. போப் அவர்கள் தம் கைவசம் வைத்திருந்த ஆங்கிலம் ஜெர்மனி பாஷை கைவல்லிய நவநீதம்) சென்னை 1. லிங்கிச்செட்டித் தெரு, No. 105 ஸ்ரீ மறைமலையடிகள் நூல் நிலையத்தில் பழைமையான அரிய நூல் தொகுப்புகளின் கண்ணும் வைக்கப்பெற்றிருக்கின்றன. காண விரும்புவோர் அங்குக் காணலாம். அவற்றின் டைட்டல் பேஜ்ஜுகள் மட்டும் இங்கு காட்டப்படுகின்றன.

# KAIVALJANAVANITA

A VEDANTA POEM

THE TAMIL TEXT WITH A TRANSLATION

A GLOSSARY

AND GRAMMATICAL NOTES

To-Which is-Added

## An Outline of Tamil Grammar

WITH SPECIMENS OF TAMIL STRUCTURE

And

COMPARATIVE TABLES OF THE FLEXIONAL SYSTEM

IN OTHER DRAVIDA LANGUAGES

By

**CHARLES GRAVL, D.D ,**

*Director of :*

THE LEIPZIG EVANGELICAL LUTHERAN
MISSIONARY INSTITUTION.

*Member of :*

THE HISTORICAL-THEOLOGICAL

and of

THE GERMAN ORIENTAL SOCIETIES

LEIPZIG 1855
DORFFLING & FRANKE

LONDON 1855
WILLIAMS & NORGATE

# TAMULISCHE SCHRIFTEN

ZUR

ERLAUTERUNG DESVEDANTA - SYSTEMS

ODER

DER RECHTGLAUBIGEN PHILOSOPHIE DER HINDUS

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307

## Ubersetzung Underklarung

VON

**KARL GRAUL**

*Director :*

Der Evangel-Luther Mission

in

Leipzig, Mitglied Der Deutschen
Morgen Landischenund Der
Historisch - Theologischen Gesellschaft

1. KAIVALJA NAVANITA
2. PANCA DASAPRAKARANA
3. ATMA BUDA PRAKASIKA

*Leipzig, 1854.*

**DOR FELING UND FRANKE.**

KOVILOOR MADALAYAM
KOVILOOR
(NEAR KARAIKUDI)
PHONE 4366

சென்னை, 1. பிராட்வே No. 1/140 தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் சார்பில் ஆங்கில பாஷையின் கைவல்விய நவநீதம் அச்சிட ஆலோசனை செய்து வருகின்றனர்.

சுமார் 400 ஆண்டுகட்கு முன்பு பனையோலை ஏடுகளில் எழுதப்பெற்ற கைவல்விய நவநீதத் தமிழ்க்கவி யேடுகள், சென்னை கவர்மெண்டு ஓரியண்டல் மானஸ்கிரிப்ட்ஸ் லைப்ரரி நம்பர், R. 1177 (e)—R. 1196 (a)—R. 1390—R. 1403, ஆகிய நம்பர்களில் வைக்கப்பெற்றுள்ளன. காண விரும்புவோர் அங்குக் காணலாம்.

**அதிஷ்டான அமைப்பும் ஆலயத்தின் பெயரும்.**

பிற்காலத்தில் ஸ்ரீ நாராயண முனிவர் கலியுகாதி 4551 ஆம் ஆண்டு (ஆங்கிலம் கி. பி. 1449) சுக்கில வருடம் வைகாசி மாதம் விசாக நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் விதேகமுக்தியடைந்தனர். அதன் பின் ஸ்ரீ தாண்டவேஸ்வர முனிவர் தம் குருவானவர் முக்தியடைந்த நாள் போன்ற வைகாசி விசாகத்தன்று தமது முக்தியும் அமைக என்று சங்கற்பித்தவராய் கலியுகாதி 4636 ஆம் ஆண்டு (ஆங்கிலம் கி. பி. 1534) ஜய வருடம் வைகாசி மாதம் விசாக நக்ஷத்திரங் கூடிய சுபதினத்தில் விதேகமுக்தியடைந்தனர். அவர்களுடைய தெய்வீகத் திருமேனிகள் அவர்களுடைய சீடர்களாலும் பக்தர்களாலும் மிகவும் பூசனைபுரியப்பெற்று (பல ஆலயங்களில் பிரதிஷ்டை செய்த முனிவர்களின் திருமேனிகள் அதிஷ்டானமாக்கப் பெற்றிருப்பதுபோல) ஸ்ரீ நாராயண முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற தென்புறமிருக்கும் லிங்கத்தினடியில் அவரது தெய்வீகத்திருமேனியும் ஸ்ரீ தாண்ட

வேஸ்வர முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற வடபுற மிருக்கும் லிங்கத்தினடியில் அவரது தெய்வீகத் திருமேனி யும் அமைக்கப்பெற்று அதிஷ்டானமாக்கப்பெற்றன.

ஆகவே இவ்வாலயத்திலுள்ள இறைவனுக்கு பிர திஷ்டை செய்த முனிவர்களால் இடப்பெற்றதாயும், அம் முனிவர்கள் இயற்றிய கைவல்லிய நவநீதத்தின் "நன் னிலம் மருவும் ஏகநாயகன் பதங்கள் போற்றி" என்னும் பாடல் பெற்றதாயும் உள்ள பெயரால் ஏகநாயக ஈஸ்வரர் ஆலயம் என்று அக்காலத்திலிருந்தே வழங்குவதாயினும் (பல ஆலயங்களில் முனிவர்களால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற லிங்கங்கட்கு வேறு பெயரிருப்பினும் பிரதிஷ்டை செய்த முனிவர்களின் பெயராலும் வழங்குவதுபோன்று) பிரதிஷ்டை செய்தவர்களும் அதிஷ்டான மாக்கப்பெற் றிருப்பவர்களும் ஆகிய முனிவர்களின் பெயரால் ஸ்ரீ நாரா யணதாண்டவேஸ்வர சுவாமி ஆலயம் என்று அவர்களது சீடர்களாலும் பக்தர்களாலும் பிரசித்தமாக வழங்கப் பெற்று வருகின்றது.

ஆலய வழிபாட்டின் பலன்.

இவ்வாலய வழிபாடு உடையோர்களுக்கு இஷ்டசித்தி களும் பேரின்பப் பெருவாழ்வும் அமைந்து வருகின்றன.

வரலாறு (சுருக்கம்) முற்றிற்று.

**வேண்டுகோள்.**

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்பட்டதாயுள்ள இத்தகைய மகத்துவமுடைய ஆலயமானது தற்காலம் ஜீரணோத்தாரணம் செய்யப்பெற்று வருவதால் அன்பர்களின் பொருளுதவியும் ஒத்துழைப்பும் வேண்டப்பெறுகின்றன. திருப்பணிக்கு உதவும் அன்பளிப்புகளை அடியில் கண்ட விலாசத்திற்கு அனுப்பலாம்.

இங்ஙனம் :

**M. கோவிந்தசாமி சுவாமி**

தருமபரிபாலனத்தலைவர், செயலாளர் & பொருளாளர்.

ஸ்ரீ நாராயணதாண்டவேஸ்வர சுவாமி ஆலயம்

நன்னிலம்,

தஞ்சை மாவட்டம்.



உ. கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

8049
Q1:38

பாரி அச்சகம், சென்னை - 1.